**சப்ரகமுவ மாகாண சபை – 2021 ஆம் வருடம்**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சப்ரகமுவ மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23(1) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு பிரகாரம் மாகாண சபையில் முன்வைக்க ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபரகமுவ மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கான நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 286,556,686 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இவ் வேறுபாடு 2022 ஆம் வருடத்தில் திருத்தப்படுவதற்குத் தேவையான அறிவுறுத்தல் வழங்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நடைமுறையல்லாச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடத்தின் இறுதியில் காணப்பட்ட 03 கணக்கு மீதிகளுக்கு உரிய கூட்டுத்தொகை ரூபா 73,363,162 ஆன தவறுகளைத் திருத்தியதன் விளைவு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுப் | 2021 ஆம் வருடத்தில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட போது 2020 இல் கணக்காய்வு செய்யப்பட்ட புள்ளி விபரங்கள் ஒப்பிட்டளவில் வழங்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்காலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற | நிதிக்கூற்றுக்கள் சரியாக வழங்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| பெறுமதிகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்ட பெறுமதிகள் ஒப்பீட்டளவில் சமர்ப்பிக்கப்படும். |

.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக சரியாகவும் மற்றும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையீட்டு செயற்பாடு தொடர்பான பொறுப்பு, மாகாண திறைசேரி உள்ளிட்ட அவ் அவ் நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் சபரகமுவ மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வின் பிரகாரம் கணக்காய்வு என்னால் செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல மோசடி ஏற்பட காரணமாகும்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டுமாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளில் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்
பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 804 – பிரதான செயலாளர்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண சபைத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டொன்று ரூபா 11,136,000 ஆன (வரி உட்பட) மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வழங்குவதற்காக 2001 ஆம் வருடத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் பிரதான செயலாளர் அலுவலகத்தினால் 2001 ஆம் வருடத்திலிருந்து 2019 திசெம்பர் 31 வரை தவணைக் கொடுப்பனவுகள் தாமதமடைந்தமையால் ரூபா 2,255,027 ஆன தொகையொன்று அதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் விடயப்பரப்பு அதிகாரியின் கவனயீனம் இதற்கான காரணமாக இருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ரூபா 2,308,044 ஆன வட்டித்தொகையை நீக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் அது செய்யப்படவில்லையென்பது குறிப்பிடப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு செய்வதற்கு ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் காணியின் பூரண உரிமை பெறப்பட்டதன் பின்னர் காணியை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரின் 2022 ஏபரல் 01 அந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டு.ள்ளது. | அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கும் கையகப்படுத்தலை விரைவில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5.2 தலைப்பு 808 – பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவை)**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ''அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை'' செயற்திட்டத்தின் கீழ் 2016 தொடக்கம் 2019 ஆன காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்தமிடப்பட்ட பெறுமதி ரூபா 188,985,906 ஆன கேகாலை நிறைவேற்று பொறியியல் அலுவலகத்தினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற 11 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள், நிர்மாண காணிகளின் பிரச்சினைகள், ஒப்பந்தக்காரர்களுக்கு பகுதிப்பணம் செலுத்துவது தாமதமானமை போன்ற காரணங்களால் மீளாய்வாண்டில் அது நிறுத்தப்பட்டது. | பல்வேறு காரணங்களால் இத் தொழிற்சாலைகளின் நிர்மாணம் நிறைவடையாதுடன் இது தொடர்பாக ஒப்பந்த அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த காலத்திற்குள் குறிப்பிட்ட செயற்திட்டங்களை முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 தலைப்பு 809 – மாகாண வருமான திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 சனவரி 01 இல் 1991 – 2019 இற்கிடைப்பட்ட காலப்பகுதிக்குரிய சப்ரகமுவ மாகாண வருமானத் திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை வரிப் பெறுமதி ரூபா 20,752,999 என்பதுடன் 2021 திசெம்பர் 31 வரை அதில் அறவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 2,285,345 அதாவது 11 சதவீதமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. சப்ரகமுவ மாகாண விதி 116.3 இன் பிரகாரம் நிலுவை வரி அறவிடுதல் தாமதமானவை தொடர்பாக மாகாண வருமான ஆணையாளரினால் பிரதான செயலாளருக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரை வருட நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை எதிர்காலத்தில் மாகாண நிதி விதி 116.3 இன் பிரகாரம் பிரதான செயலாளருக்கு பிரதியொன்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பதற்கும் நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

**1.5.4 தலைப்பு 810 – நீதி மற்றும் சமாதனம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதாரம், சுதேச வைத்தியம், பெண்கள் விவகாரம், கூட்டுறவு, வியாபாரம் மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், செய்திகள், வீடு மற்றும் நிர்மாணம் மற்றும் சமய விவகாரம் அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் காணப்பட்ட ஜீப் வாகனமொன்று 2017 செப்டெம்பர் 05 ஆந் திகதி அவசர விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் வாகனம் திருத்தப்படுவதற்காக உள்ளுர் முகவர் நிறுவனத்திற்கு அனுப்பட்டிருந்தும் முகவர் நிறுவனத்தினால் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டு அது முற்றாகச் சேதமடைந்த வாகனமாகக் கருதப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும் அதன் பிரகாரம் முழு இழப்பு அடிப்படையில் காப்புறுதி கம்பனிக்கு ஒப்படைத்தால் ரூபா 25 மில்லியன் ஆன காப்புறுதி இழப்பீடொன்று வழங்கப்படுவதற்கு காப்புறுதி கம்பனியால் இணக்கம் தெரிவிக்கப்பட்டபோதும் ,பிரதான செயலாளரினால் வாகனம் திருத்தப்படுவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அரசபெறுகை வழிகாட்டி பின்பற்றப்பட்டு தகுதியான நிறுவனமொன்று தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக தனியார் நிறுவனமொன்றுக்கு வாகனம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை திருத்த வேலைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. திருத்தங்களுக்கான மதிப்பீடொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஜீப் வாகனத்தின் திருத்த வேலைகள் பெருமளவில் நிறைவடைந்துள்ளதுடன் குறிப்பிட்ட நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டடமை தொடர்பான தகவல்கள் பிரதான செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. | 1. பெறுகை வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டியதுடன் அதிகாரிகளால் பொருளாதார மற்ற முடிவுகள் எடுக்கப்பட முடியாமை.<br>2. விரைவில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் பட்டு காப்புறுதிக் கம்பனியால் உரிய தொகை தீர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண கட்டுப்பாட்டு நிறுவனம் உற்பத்தி செய்கின்ற கொம்போஸ்ட் உரச் செய்கையின் பொருத்தமான தரப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் பிரதான அமைச்சிற்கு குறை நிரப்புத் தொகை கூற்றின் மூலம் ரூபா 100 | தற்போது 10 இயந்திரங்கள் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.. | ஒதுக்கங்கள் வழங்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக பணம் செலவிடப்பட வேண்டிய போதிலும், செலவிடப்பட்ட தொகையில் எதிர்பார்த்த பலனை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பிரதான அமைச்சினால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி பெறுகைகளுக்கு ரூபா 9,500,000 செலவிடப்பட்டு கொம்போஸ்ட் உரம் உற்பத்திக்கு சம்பந்தமற்ற உக்காத குப்பை முகாமைத்துவத்திற்குத் தேவையான 10 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் 10 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அந்த உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தும் மும்முனை மின் இணைப்பு கிடைக்காமையால் 2022 செப்டெம்பர் 22 ஆம் திகதி வரை அந்த இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்தன. | | |
| (இ) | 2017 தொடக்கம் 2020 ஆம் வருடம் வரையான காலப்பகுதியில் பிரதான அமைச்சினால் மொத்தம் ரூபா 6,376,906 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 சமூக குடிநீர் செயற்திட்டங்களில் மும்முனை மின்சாரம் இல்லாமை. தண்ணீர் மோட்டடார் மற்றும் தண்ணீர் தேக்கி வைக்கும் தாங்கியும் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத குறைபாடு காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கப்பட முடியாதிருந்தது. | நீர்ச் செயற்திட்டங்களின் குறைபாடுகளை பூரணப்படுத்துவதற்காக 2022 அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்குதல் மற்றும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டம் திட்டமிடப்படும் போது சரியாகத் தேவைகள் இனங்காணப்பட வேண்டியதுடன், காணப்படுகின்ற குறைபாடுகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்த்த பயன்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4.1 வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருமான விடயங்களுக்கான அட்டவணைகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26,714,713 ஆகும். அம் மீதியில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதி ரூபா 13,524,646 ஆக இருந்ததுடன் அம் மீதிகளை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் காணப்பட்ட கொவிட் 19 நிலைமை காரணமாக இத் தொகை அறவிடப்படுவதற்கு முடியாது நிலுவையாகக் காணப்பட்டமையால் 2022 ஆம் வருடத்தில் இம் மீதியில் பெருமாமொன்ற அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட முகாமையாளர், நிதி உதவியாளர், இயக்க முகாமையாளர். நலன்புரி அதிகாரி மற்றும் காவலாளி போன்ற பதவிகள் அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அப்பதவிகளுக்காக 10 பேர் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 03 பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக 57 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | புதவிகள் அங்கீகரிக்கப்படுவதற்கு நிதி ஆணைக்குழுவினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பபட்டுள்ளது. | பதவிகள் அங்கீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | டீஎம்எஸ்/எஸ்ஜீ/0505 ஆம் இலக்க மற்றும் 2017 மே 29 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு குறிப்பிட்ட நிறுவனத்தின் வருமானத்தில் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 2021 ஆம் வருடத்தின் பாதீட்டுப் பற்றாக்குறை தீர்ப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கான சம்பளம் செலுத்துவதற்கு மாதாந்தம் செலவிடப்படுகின்ற தொகை பிரதான அமைச்சினால் மீள் நிரப்பபட்டிருந்தது. | நிதி ஆணைக்குழுவினால் 118 அதிகாரிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகளுக்கு கவனம் செலுத்துவதற்குப் பிரதான அமைச்சின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4.2 அபிவிருத்தி ஆற்றல் மற்றும் இயந்திர உபகரணங்கள் அதிகார சபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 யூலை 19 ஆந் திகதிய DMS/SG/0504 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் உழைக்கின்ற வருமானத்தில் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் அதிகார சபையின் பதவியணி அங்கீரிக்கப்பட்டிருந்தும் அபிவிருத்தி ஆற்றல் மற்றும் இயந்திர உபகரணங்கள் அதிகார சபையின் பதவியணிக்கு ஆளணி வேதனங்கள் செலுத்துவதற்காக மீளாய்வாண்டில் | 2021 ஆம் வருடத்தின் வருமானம் சிறிதளவு குறைவடைந்துள்ளதால் கௌரவ ஆளுனருக்கு விடயங்களை விளக்கிய பின்னர் இம் மானியம் வழங்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

ரூபா 6,000,000 பிரதான அமைச்சினால் மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

**1.5.4.3 பின்னவல புராதன பூங்கா**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இன் 01 ஆம் இலக்க பின்னவல புராதனப் பூங்கா அதிகாரச் சட்டத்தின் 25.1 ஆம் பிரிவின் பிரகாரம் பூங்கா வருமானம் ஈட்டும் நிலைமையை அடையும் வரை அதை நடாத்திச் செல்வதற்காக மாகாண சபை நிதியத்தின் மூலம் ஆரம்ப மூலதனமொன்றை வழங்க முடியா என்பதுடன் 25.3 ஆம் பிரிவின் பிரகாரம் பூங்காவின் வருமானம் ஈட்டும் செயற்பாட்டில் முறிவு அல்லது நிதிச் சிக்கல்கள் ஏற்பட்டால் 06 மாத காலப்பகுதிக்கு போதியளவு சம்பளம் மற்றும் பராமரிப்பிற்காக சப்பிரகமுவா மாகாண நிதியத்திலிருந்து 10 சமமான தவணைகளில் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய கடன் தொகையொன்று வட்டியின்றி வழங்குவதற்கு சப்ரகமுவ மாகாண சபைக்கு நடவடிக்கை எடுக்க முடியும் அதன் பிரகாரம் பிரதான அமைச்சினால் பூங்காவின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை மொத்தம் ரூபா 7,529,920 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அத் தொகை அறவிடப்படாது பிரதான அமைச்சின் செலவொன்றாக கணக்கீடு செய்யப்பட்டு முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய சூழ்நிலைக்கேற்ப சுற்றலாத்துறை முற்றிலும் சரிந்துள்ளதால் கடனை எடுத்து குறுகிய காலத்திற்குள் செலுத்தக் கூடிய சூழல் நிறுவனத்தில் இல்லாமையால் தொர்ந்தியங்கும் தன்மைகக்காக 2016 இன் 01 ஆம் இலக்க பின்னவல புராதன பூங்கா அதிகாரச் சட்டத்தின் 25.1 ஆம் பந்தியில் செய்யப்பட்டள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவனத்திற்கு மாகாண மசபை நிதியத்தின் மூலம் அதன் நிதி ஒதுக்கங்கள் மூலம் வருமான நிலைமை மோசமடைந்தால் தீர்க்கப்பட முடியாத அனைத்து முற்பணங்களையும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.. |

**1.5.5 தலைப்பு 811 – சுகாதாரத் திணைக்களம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்களால் இரத்தினபுரி மாவட்டத்தின் வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் உட்பட சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கு முற்பணங்களை வழங்கி திருத்த வேலைகள் தொடர்பாக கணக்காய்வின் மூலம் தெரிவு அடிப்படையில் 07 நிறுவனங்களில் மேற்கொள்ள்பட்ட பௌதீக பரிசோதனையின் போது உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளில் காணப்படுகின்ற நலிவுகள் காரணமாக அதில் 05 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்கள் தொழிலாளர்களை ஈடுபடுத்தியதாக பொய்யைக் கூறி தொழில் வழங்குனரினால் தினசரி சம்பளமாக ரூபா 1,048.550 அதிகமாக பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நேரடி அடிப்படையில் செய்யப்படுகின்ற திருத்தங்களில் பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் தொடர்பாக அறிவுறுத்தல் இரத்தினபுரி மாவட்டத்தின் அனைத்து சுகாதார நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று நடாத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். . | பொறுப்பானவர்களிடமிருந்து மேலதிக பணம் அறவிடப்பட வேண்டியதுடன் அறிமுகப்படுத்தப்பட்ட முறைமை முறையாக செய்யப்படுகின்றதா என்பதை பின்தொடர்ந்து பார்த்தல் வேண்டும |
| (ஆ) | கேகாலை மாவட்டச் சுகாதார பணிப்பாளரின் அலுவலகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிகை 126 என்பதுடன் உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை 219 ஆகும். அதன் பிரகாரம் 8 வகையான பதவிகளுக்கு பதவியணி வெற்றிடங்கள் 10 என்பதுடன் 07 வரையான பதவிகளுக்கான மேலதிக பதவியணி 103 ஆகும். | சேவையை முறையாக நடாத்திச் செல்லும் எடுக்கப்பட்ட இந்த அதிகாரிகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் தேவையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்படுவதற்கு மற்றும் மேலதிக பதவிகள் மேம்படுத்துவதற்கான கவனம் கோரப்படும். . | வெற்றிடங்கள் நிரப்படுவதற்கு மற்றும் மேலதிக பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கும் அல்லது வேறு தகுதியான இடங்களுக்கு இணைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.6. தலைப்பு – 813 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் 2014 யூலை 03 ஆந் திகதிய 2014/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் வேறு நிதிச்சேவை கூட்டுறவு வங்கிகளால் கிராமிய வங்கிச் சங்கங்களில் மற்றும் வரையறுக்கப்பட்ட சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு செய்யும் போது கூட்டுறவு ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வைப்புக்களில் அதிகபட்சம் 15 சதவீதம் வரை மட்டுமே முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 21 சங்கங்கள் வைப்புக்களின் 16 சதவீதம் தொடக்கம் 81 சதவீதம் வரையான வீச்சில் இச் சங்கங்களில் முதலீடுகளைச் செய்திருந்தன. | 50 சதவீதத்திற்கு அதிகமாக முதலீடு செய்வதற்கு உரிய கூட்டுறவு அபிவிருத்திப் பிரதேச அதிகாரியினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | மேற்பார்வை அதிகாரியினால் சங்கங்களின் நிதி நடவடிக்கைகளில் காணப்படுகின்ற நலிவுகள் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சப்ரகமுவ மாகாண 2007 இன் 03 ஆம் இலக்க கூட்டுறவு சங்க அதிகாரச் சட்டத்தின் 43(அ) பிரிவின் பிரகாரம் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கான கணக்கு மற்றும் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் உட்பட வருடாந்த இறுதிக் கணக்கு மற்றும் பரீட்சை மீதியொன்று அனைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களினாலும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அது நிதியாண்டு முடிவுற்று 03 மாதங்களுக்குள் பதவினருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் இரத்தினபுரி மாவட்டத்தின் செயற்படுகின்ற 243 சங்கங்களில் 152 சங்கங்கள் 2020 ஆம் வருடத்திற்கான இறுதிக் கணக்குகள் தயாரித்து | 2022 யூன் 01 ஆம் திகதி வரை 13 பல்வேறு சேவை கூட்டுறவு சங்கங்களின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த ஏனைய சங்கங்களில் சில சங்கங்களில் மட்டுமே இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விசேட கவனம் செலுத்தப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

சமர்ப்பிக்காததுடன் அக் காரணத்தினால் மேற்படி அதிகாரச் சட்டத்தின் 44(1) பிரிவின் பிரகாரம் அச்சங்கங்களை வருடாந்தக் கணக்காய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. கூட்டுறவு சங்கங்களில் அதிகாரிகளுக்கு இறுதிக் கணக்குகளை தயாரிப்பது தொடர்பாக போதிய அறிவு இல்லாமையே இதற்குக் காரணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான பணியொன்றாக கூட்டுறவு சங்கங்களை பரிசோதனை செய்தல் மற்றும் கணக்குச் செயற்பாடுகளுக்கான திணைக்களத்தின் செயற்பணி போதியளவு நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2007 இன் 03 ஆம் இலக்க சப்பரகமுவ மாகாண கூட்டுறவு சங்க அதிகாரச் சட்டத்தின் xi ஆம் அத்தியாயத்தின் 58(1) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் உள்ள தகராறுகளைத் தீர்ப்பதற்கான அதிகாரம் பதிவாளருக்கு உள்ளதுடன், இத் தகராறு தீர்ப்பதற்காக சங்கங்களின் மூலம் பணம் வைப்புச் செய்வதற்கு அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் திணைக்களத்தினால் தகராறுகளைத் தீர்ப்பதற்காக உரிய சங்கங்களிடம் தீர்மானக் கட்டணமொன்று அறவிடப்பட்டு தகராறுகளைத் தீர்க்கும் அதிகாரிகளுக்கு நடுவர் ஊதியம் வழங்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டில் அவ்வாறு நிர்மாணக் கொடுப்பனவாக மொத்தம் ரூபா 4,276.848 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வினால் சப்பரகமுவ மாகாண சபையின் சட்ட அதிகாரியிடம் இது தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பில் பெறப்பட்ட விளக்கத்தின் | தகராறுகளைத் தீர்ப்பபதற்கு ஏற்படக் கூடிய எழுது கருவிகள் தபாற் செலவு, எடுக்கும் நேரம் மற்றும் தகராறின் சிக்கலான தன்மை ஆகியவற்றை கருத்திற் கொண்டு 2019/08 சுற்றறிக்கைப் பிரகாரம் கட்டணம் அறவிடப்படுகின்றது. . | சட்டரீதியற்ற கொடுப்பனவுகள் செய்யப்பட முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அவ்வாறு தீர்மானக் கட்டணம் செலுத்துவது சட்டவிரோதமான செயல் என அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2007 இன் 03 ஆம் இலக்க சப்பரகமுவ மாகாண கூட்டுறவு சங்க அதிகாரச் சட்டத்தின் xi ஆம் அத்தியாயத்தின் 59(7) பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்திலிருந்து அறவீட்டுப் பதிப்பாளருக்கு அனுப்படும் தொகை தொடர்பாக பதிவாளரினால் உரிய தீர்மானம் அல்லது தீர்ப்பனவு பொருத்தமானதாக இருக்க வேண்டும். ஆனால் வழக்கு நடவடிக்கைகளுக்கான தீர்மானம் அல்லது தீர்ப்பு திணைக்களத்தினால் பெறப்படாததுடன், பெறப்பட்ட நீதிமன்ற தண்டப் பணத்தில் 2 சதவீதம் நீதிமன்ற அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு ஊக்கப்படியாக வழங்கப்பட்டு மிகுதி 98 சதவீதம் ஆன தொகை உரிய சங்கங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 1,863,515 ஊக்கப்படிகளாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வினால் சப்ரகமுவ மாகாண சபையின் சட்ட அதிகாரியிடம் இது தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பில் பெறப்பட்ட விளக்கத்தின் பிரகாரம் அவ்வாறு ஊக்கப்படிகள் செலுத்துவது சட்டவிரோதமான செயல் என அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மாகாண கூட்டுறவு அமைச்சின் செயளாளரின் பரிந்துரையுடன் ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தால் திருப்பி அனுப்பப்படுகின்ற தொகையில் 2 சதவீதம் நீதிமன்ற அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு ஊக்கப்படியாக வழங்கப்பட்டது. . | சட்டரீதியற்ற கொடுப்பனவுகள் செய்யப்பட முடியாது. |

**1.5.7 தலைப்பு 814 –உள்ளூராட்சித் திணைக்களம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 இன் 74 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்கச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடும் சட்டம் மற்றும் 2007 மே 18 ஆந் திகதிய SP/CSA/07/07 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மக்கள் வாக்கெடுப்பின் போது தெரிவு செய்யப்பட்ட மேயர்கள், தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், உள்ளூராட்சி ஆணையாளருக்கு தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2018 ஆம் வருடத்தின் உள்ளூராட்சி தேர்தலின் மூலம் 29 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக் தெரிவு செய்யப்பட்ட 807 உறுப்பினர்களின் 805 பேர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை 2022 மே வரை சமர்ப்பிக்கவில்லை. | அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களில் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை பெறுவதற்காக கடிதம் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. | பொருந்தக் கூடிய சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

**1.5.8 தலைப்பு 820 – மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாணச் சுற்றுலாத் தொழிலின் மேம்பாட்டிற்காக மாகாணத்தினூடாக பயணிக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா பயனாளிகளுக்கு வசதிகளுடன் கூடிய இடமொன்றை உருவாக்கும் | இக் கட்டிடம் 2011 ஆம் வருடம் வரை குருவிட்ட பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்ததுடன் 2015 ஆம் வருடத்தில் சுற்றுலா விடுதி செயற்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டமையால் அமைச்சிற்கு | முறையான சாத்தியக் கூறு ஆய்விற்குப் பின்னர் இவ்வாறான நிர்மானம் செய்யப்பட வேண்டியதுடன் இந் நிர்மாணத்தினால் நாட்டிற்கு ஏற்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கத்துடன் இரத்தினபுரி கொழும்பு பிரதான வீதிக்கு அருகாமையில் நாமல்தெனிய சுற்றுலா விடுதி 2005 ஆம் வருடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. முறையான சாத்தியக்கூறு அறிக்கை இல்லாமல் கட்டப்பட்ட இக்கட்டிடத்திற்கு வீதிகள் அமைச்சினால் 2004 ஆம் வருடம் தொடக்கம் 2021 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் மொத்தம் ரூபா 12,641,235 ஆன செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் 2005 ஆம் வருடத்திலிருந்து 2021 திசெம்பர் 31 வரை 05 வருடங்கள் மட்டும் இவ்விடுதி திறந்து வைக்கப்பட்டிருந்ததுடன் 12 வருடங்களாக இக்கட்டிடம் எவ்வித பணியொன்றுக்காகவும் பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருந்தது. | மீண்டும் பெறப்பட்டிருந்தது. அதன் பின்னர் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆகஸ்ட் மாதத்தில் சுற்றுலா விடுதி மாதாந்த குத்தகை அடிப்படையில் வெளியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட எதிர்மறைத் தாக்கத்துடன் வணிகம் நட்டத்தை சந்தித்தமையால் 3 மாதங்களில் பின்னர் மீண்டும் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் 2021.01.12 தொடக்கம் குருவிட்ட பிரதேச சபையின் கோரிக்கையின் அடிப்படையில் கட்டிடம் பராமரிக்கப்படுவதற்காக மீண்டும் குருவிட்ட பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டது எனினும், கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக சுற்றுலா வசதிகளுக்காகப் பயன்படுத்துவதற்கு சிரமமான நிலையில் காணப்பட்டது. | நட்டத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தெஹியோவிட்ட நிறைவேற்று பொறியியல் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் சப்புமல்கந்த வீதி 0 கி.மீ தொடக்கம் 6.2 கி.மீ வரை பராமரிக்கும் தொழிலின் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 2,790,000 ஆக இருந்ததுடன் ரூபா 1,385,320 ஆன செய்யப்பட்ட வேலை பெறுமதியொன்றுடன் ஒப்பந்தக்காரர் வேலையை முடித்திருந்தார் உள்ளகக் கணக்காய்வாளர் இவ் விதி 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதி பௌதீகப் பரிசோதனையின் போது ஒட்டு மொத்த தொழில் துறையுடன் பராமரிப்புத் தூரத்தில் 50 சதவீதத்திற்கு மேல் வீதிகள் சேதமடைந்துள்ளமை தொழில் துறையின் பராமரிப்புக் காலத்திற்குள் வீதியின் சேதம் அதிகரித்து பிடிகாசில் முடிப்பதற்கு முடியாத | தொழிலுக்கு அத்தியவசியமாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கு மட்டுமே பணம் வழங்கப்பட்டுள்ளது. தொழில்துறையின் பராமரிப்புக் காலம் 2021/05/06 ஆம் திகதி முடிவடைந்ததுடன் அது வரை வீதியின் சில இடங்கள் மட்டுமே பாழடைந்த நிலைமையில் காணப்பட்டது. அவற்றை சீரமைப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் ஒப்பந்தக்காரரினால் அச் சீரமைப்பு முடிக்கப்படாமையால் பிடிகாசு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையாக காணிகள் முடிக்கப்படாமை மற்றும் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளைச் சரி செய்யாமல் பிடிகாசு பெறாத ஒப்பந்தக்காரர் தொடர்பாக கண்டு பிடித்து கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமையில் பாழடைந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட தொகையில் 50 சதவீதத்திற்கும் குறைவான பணிகள் முடிவடைந்துள்ளதால் வீதியின் தரம் குறைத்து செய்யப்பட்ட செலவுகள் பொருளாதாரமற்றதாக இருந்தமைக்கான காரணமென்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | தெஹியோவிட்ட நிறைவேற்று பொறியியல் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற நூரிய பொல்கஸ்வத்த பொல்பிடிய (கோவல) வீதி 0 கி.மீ தொடக்கம் 2.00 கி.மீ வரை பராமரிக்கும் தொழிலின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9.2 மில்லியன் ஆக இருந்ததுடன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 6.9 மில்லியன் ஆகும். எனினும், பணி முடிப்பதற்கான பெறுமதி ரூபா 4.9 மில்லியன் ஆகும். இவ் வீதியின் 2 கி.மீ தூரமான அளவிற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வீதியின் ஆரம்ப 500 மீற்றருக்கான பகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டு 1.5 கி.மீ மட்டுமே பராமரிக்கப்பட்டிருந்தது. சனாதிபதியின் திகெல்லகந்த கிராமத்தில் நடைபெற்ற ‘‘கிராமத்துடன் கலந்துரையாடல்’’ வேலைத் திட்டத்தின் இவ் வீதியைக் கம்பளமிடுவதற்கு முன்மொழியப்பட்டதால் அதுவரை நிர்மாணத்தை மேற்கொண்டு வந்த தொழில் நிறுவனம், செய்யப்பட்ட பணிகளை முடிக்கும் பணியில் ஈடுபட்டதால் வீதி மிகவும் பாழடைந்து செய்யப்பட்ட செலவுகள் பொருளாதாரமற்றதாக இருந்தது. | இத்தொழிலை முடிப்பது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்ட கௌரவ ஆளுநரின் தலைமையில் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நடைபெறும் சந்தர்ப்பம் வரை இத்தொழிலின் கீழ் ABC Prime செய்யப்பட்டிருந்ததாகவும் ABC இடப்பட்டு Prime செய்தலானது தற்காலிகத் தீர்வொன்று என்பதால் பொதுவாக சிறிது நேரம் கழிந்ததும் கழுவப்படுகின்றது. மாண்புமிகு சனாதிபதியின் திககெல்லகந்த கிராமத்தில் நடைபெற்ற ‘‘கிராமத்துடன் கலந்துரையாடல்’’ வேலைத் திட்டத்தின் இவ் வீதியைக் கம்பளமிடுவதற்கு முன்மொழியப்பட்டதால் அதுவரை நிர்மாணத்தை மேற்கொண்டு வந்த தொழிலை இடையில் நிறுத்துமாறு அதிகாரிகளினால் ஆறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக வும் அதனால் செய்யப்பட்ட பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அத்தியவாசியப் பராமரிப்புத் தொழில் தொடர்பான நிறைவேற்றுப் பொறியியலாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு பணிகளைக் கையளித்துப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பணிகளை நிறுத்தியமையால் பொது மக்களுக்கு ஏற்பட்ட நட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் 06 ஒப்பந்தக்காரர்களுக்கு 2021 யூலை 16 தொடக்கம் 2021 ஆகஸ்ட் 25 இற்கிடையேயான காலப்பகுதியில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 13 மற்றும் 2021 நவம்பர் 22 இல் பணிகள் முடிக்கப்படுவதற்கு ரூபா 115,823,454 ஆன 18 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தக்காரரினால் 2021 திசெம்பர் 31 வரையில் மொத்தம் ரூபா 46,476,848 ஆன 7 ஒப்பந்தங்களுக்கான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 69,346,606 ஆன 11 ஒப்பந்தங்களின் 2021 திசெம்பர் 31 இல் பௌதீக முன்னேற்றம் 5 சதவீதம் தொடக்கம் 80 சதவீதம் வரையில் நிதி முன்னேற்றம் ரூபா 7,592,760 ஆகக் காணப்பட்டது. ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஒரே காலப்பகுதியில் பல தொழில்கள் வழங்கப்பட்டிருந்தமையால் இப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் தாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் அரச நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பொது மக்களுக்கு உரிய பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | இந்த ஒப்பந்தக்காரர்களுக்கு அவர்களின் பதிவுத் தொகுதியின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தக்காரர் செயற்திட்டங்களை செய்து கொண்டிருந்த போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை (விலை உயர்வு, மூலப் பொருட்களின் பற்றாக்குறை) குறிப்பிட்டுச் செயற்திட்டத்தை இரத்துச் செய்யவோ அல்லது காலத்தை நீடிப்பதற்கோ கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ஒப்பந்தம் வழங்கப்படும் போது பதிவுத் தொகுதிக்கு மேலதிகமாக தாமதமடைந்தமை, பணிகள் தவறுகள் தொடர்பாகக் கவனம் கோரப்படல் வேண்டும். |
| (உ) | வீதி அபிவிருத்தியின் கீழ் 2006 மற்றும் 2007 ஆம் வருடங்களில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த தொழிலை நிறைவேற்றுவதற்காக | ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ள முற்பண பணத்தை தீர்ப்பதற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த முகவரிகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் | இக் கட்டுநிதி வழங்கப்பட்டு 14 வருடங்கள் கடந்திருந்தமையால் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| முற்பணமாமக வழங்கப்பட்ட ரூபா 4,812,343 ஆன மீதி மீளாய்வாண்டின் வரை 14 வருடங்களுக்கு மேற்பட்டிருந்தது. இது தொடர்பாக கடந்த வருடத்தில் கணக்காய்வு விசாரணையின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பதிலாக ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடுவர் மன்றத்திற்கு அனுப்புவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது வரை அம்முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டதுடன் அவர்களது வசிப்பிடம் தொடர்பான உறுதியான தகவல்களைக் கண்டு பிடிக்க முடியாதிருந்தது. அவர்களினால் கையளிக்கப்பட்டுள்ள மேல் முறையீட்டில் காணப்பட்ட வழக்கில் கூட இந்த ஒப்பந்தக்காரர் சமூகமளிக்கவில்லை . 2020.07.03 ஆம் திகதி இக் கட்டு நிதி தீர்த்தல் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அறிவுறுத்தலின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடுவர் மன்றத்திற்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவி கோரப்பட்டுள்ளது | அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.9 தலைப்பு 830 – சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமப/21/1596/304/134 மற்றும் 2021 செப்டெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, நிதி அமைச்சரின் 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய ‘‘அரச செலவுகள் மீளாய்வு’’ எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 02(vi) பந்தியின் பிரகாரம் மூலதன அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்களை விநியோகித்தமை மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை கைவிடுவதற்கு | 2021.08.13 ஆம் திகதி பிரதான செயளாளரின் CSP/MD/13 கடிதம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் பிரதான செயளாளரின் CSP/10/SUP/21 ஆம் இலக்க மற்றும் 2021.11.07 ஆம் திகதிய கடிதம் மூலம் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம நடவடிக்கை எடுக்கப்படாமையால் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முன்மொழியப்பட்டிருந்தது. இவ்வாறு இருந்த போது ''அபிவிருத்தி உதவி'' என்ற விளக்கத்தின் கீழ் இரண்டாம் குறை நிரப்பு தொகை கூற்றின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு இதன் மூலம் ரூபா 11,596,320 செலவிடப்பட்டு சுயேச்சை அமைப்புக்களுக்கு விநியோகிப்பதற்காக பிளாஸ்டிக் கதிரைகள், மின் உற்பத்தி இயந்திரம் மற்றும் சமையலறை உபகரணங்கள் போன்றன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 1.5.9.1 தொழில் அபிவிருத்தி அதிகார சபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலவின்ன இயல்பு நிலை கொங்ரீட் பிரிவிற்கு நிதியாண்டின் இறுதி வரையில் தீர்க்கப்படாது வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதி ரூா 5,564,032 ஆகும். | குறிப்பிட்ட கடன்பட்டோர் மீதி அறவிடப்படுவதற்கான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் மீதி விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.

### 1.5.10 தலைப்பு 840 – கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் வலயக்கல்வி அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட 2016 ஆம் வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப விசாரணைகள் முடிக்கப்படாத 22 சந்தர்ப்பங்கள் மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் முடிவடையாத 04 சந்தர்ப்பங்கள் 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்டன. | ஆரம்ப விசாரணைகளுக்காக நினைவூட்டல்கள் அனுப்பட்டுள்ளதுடன் முறையான ஒழுக்காற்று விசாரணை இதன் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று நடவடிக்கைகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் விரைவில் முடிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட இ/தர்மபால மகா வித்தியாலயத்தின் நான்கு மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணக் கைத்தொழில் ரூபா 25,922,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போது அக் கட்டிடத்தின் முதலாம் கட்ட நிர்மாணம் ஒப்பந்தக்காரரின் வாய்மொழி அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,668,029 ஆன 37 வேலை உருப்படிகள் தவறாக உள்ளடக்கப்பட்டு வேறு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாம் கட்டம் முடிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி வேலைப்பகுதி இரண்டாம் மதிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டுத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாதக பிரதான செயலாளரினால் குறிப்பிடப்பட்டிருந்தும் 2022 செப்தெம்பர் 12 திகதி வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது பெறுகை வழிகாட்டி கோவையின் பெறுகை நடைமுறை மூலம் சான்றுபடுத்த வேண்டிய 1.2.1 (அ) (ஆ) மற்றும் (ஊ) ஆகிய வழிகாட்டலுக்கு இணங்காமை அவதானிக்கப்பட்டது. மேலும் சப்ரகமுவ மாகாணக்கல்வி அமைச்சினல் 2011 பெபரவரி 10 ஆந் திகதிய ஜா.கொ.ப.ச 2011/01 ஆம் இலக்க இடர் முகாமைத்துவ அமைச்சு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியுடன் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் பெறப்பட வேண்டிய திகதிச் சான்றிதழை பெறாததுடன் 1982 இன் 4 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் திருத்திய 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் | இந்த இரண்டாம் கட்டிடத்திற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரை கட்டிடத்தின் தரைத் தளத்தை பயன்படுத்துவதற்கு அவசியமாகத் செய்யப்பட வேண்டிய பல வேலை பகுதிகள் ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பாடசாலையில் காணப்பட்ட உடமையான வகுப்பறை நெரிசல் மற்றும் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை கட்டிடத்தின் தரைத்தளத்தை வாக்குச் சாவடியொன்றாக பயன்படுத்துவதற்காக இவ்வாறு செய்யப்பட்டது. செய்யப்பட்ட வேலைப் பகுதிகளை அளந்து கணக்கிடும் போது செய்யப்பட்ட வேலைப் பகுதியின் பெறுமதி 10% நிச்சயமற்ற தொகையை விட அதிகமாக மேற்கொள்ளப்பட்டமை. முதலாம் கட்டம் முடிக்கப்பட்டு ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி வேலைப்பகுதிக்காக கொடுப்பனவு செய்யப்படுவதற்கு இரண்டாம் கட்ட மதிப்பீட்டிலிருந்து நீக்கும் போது திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது உரிய காப்புறுதியைப் பெறுவதற்கு கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 1. ஒப்பந்தம் வழங்கப்படும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த மதிப்பீடு தயாரிக்கின்ற அங்கீகரிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br><br>2. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று இல்லாமையால் கொடுப்பனவுகள் செய்தல் பொருத்தமானதல்ல என்பதுடன். இரண்டாம் கட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு ஒப்பந்தத்தின் படி விரைவில் நிர்மான நடவடிக்கைகள் முடிக்கப்படல் வேண்டும்.<br><br>3. காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>4. சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

| | | | |
|---|---|---|---|
| | 23(v) பந்தியின் பிரகாரம் இந் நிர்மாணத்திற்கு உரிய கட்டிடத்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக் கவில்லை. | | |
| (இ) | வரிசை அமைச்சின் ஏற்பாடுகளின் அடிப்படையில் மாகாணக் கல்வி அமைச்சினால் 2016 ஆம் வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அருகிலுள்ள பாடசாலைகளின் சிறந்த பாடசாலை செயற்திட்டத்திற்கு உரிய போதியளவு கட்டு நிதி கிடைக்கப்பெறாமையால் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 202,457,148 ஆன 12 செயற்திட்டங்கள் 05 சதவீதம் தொடக்கம் 06 சதவீதம் வரையான சதவீதத்தில் பூரணப்படுத்தப்படாததுடன் குறிப்பிட்ட ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட விடயங்கள் காரணமாக இத் தொழிற்சாலைகள் பூரணப்படுத்தப்படாமைலேயே இரத்துச் செய்யப்பட்டுள்ளன. | மாகாண சபை நிதியத்தைப் பயன்படுத்தி செயற்திட்டத்தை விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 841 – கல்வித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பர் 30 ஆந் திகதிய ED/08/23/05/13/01 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் பாடசாலை அமைப்பில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய கொள்கையின் ஒரு பிரிவொன்றாமக 6-11 தரங்களில் உள்ள மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை டிஜிட்டல் கற்றல் கல்விகளை கருவிகளைப் பயன்படுத்த கற்பிப்பதற்காக லப்டெப் கணனிகளை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் வரிசை அமைச்சினால் ரூபா 3,259,830 செலவிடப்பட்டு ஆசிரியர்களுக்கு | இப் பணிகளுக்காக பிரதி அதிபர் நியமிக்கப்பட்ட போதிலும் அவர் கல்வி விடுமுறை எடுப்பதாக முறையாக பரிடசாலைக்குத் தெரிவிக்காமையால் குறிப்பிட்ட பணிகளுக்காக வேறு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு முடியாதிருந்தது. தற்போது குறிப்பிட்ட நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்காக 03 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.. | பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்த வளங்களில் அதிகபட்ச பிரயோசனமொன்றை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் செயற்திறனாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான வேலைத் திட்டமொன்று பாடசாலை மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும்.. |

10 லெப்டெப் கணனிகள் மற்றும் மாணவர்களுக்கு 95 கணனிகளுமாக 105 லெப்டெர்ப் கணனிகள் இரத்தினபுரி மாவட்டத்தின் பாடசாலையொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.. அக் கணனிகளைச் செயற்திட்டத்தின் நடவடிககைகளை மாகாண கல்வித்திணைக்களத்தினால் பாடசாலையுடன் ஒருங்கிணைக்கப்படவோ அல்லது மேற்பார்வை செய்யப்படவில்லை. என்பதுடன் குறிப்பிட்ட கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் அடையாளங் காணக்கூடிய வகையில் அழிக்க முடியாதமையினால் இலக்கிடமிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த இந்த 105 டெப்லெட் கணனிகளில் 50 கணனிகளுக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதற்காக வழங்கப்பட்ட வைரஸ் எதிர்ப்பு மென்பொருட்களும் பயன்படுத்தப்படவில்லை. இந்த டெப்மெலட் கணனிகளின் பாவனை மற்றும் கற்றல் கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்தல் தொடர்பாக எவ்வித பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்படுடவதுடன் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களை டிஜிட்டல் கற்றில் கருவிகளைப் பயன்படுத்திக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் மத்தியில் போதியளவு விழிப்புணர்வு இல்லாமையால் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் இற்றை வரை நிறைவேற்றப்படவில்லை என்பது கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

**1.5.12 தலைப்பு 851- காணிகள் ஆணையாளர் நாயகம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொடகவெலப் பிரதேச செயலகப் பிரிவில் 2010 ஆம் வருடத்திலிருந்து அனுமதியின்றி அனுபவித்து வரும் 05 அரச காணித்துண்டுகளை நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் அந்த 05 பேருக்குக் வழங்குவதற்காக காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அமைச்சரினால் 2018, 2019 மற்றும் 2021 ஆம் வருடங்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை காணிகளை அனுபவித்து வருகின்ற 05 பேரிடமிருந்து மொத்தம் ரூபா 517,706 ஆன குத்தகைப் பணம் அறவிடப்பட்டு நீண்டகாலக் குத்தகையை வழங்குவதற்கு சப்ரகமுவ மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் தவறியிருந்தது. | குத்தகை பணத்தைச் செலுத்துமாறு குத்தகையாளர் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 04 பேர் ரூபா 37,000 ஐச் செலுத்தியுள்ளார். | நிலுவை குத்தகைப் பணத்தை அறவிட்டு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.13 தலைப்பு 853 – விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தூய பசுப்பால் உற்பத்தி மற்றும் பால் பதப்படுத்தும் நிலையங்களை உருவாக்குதல் மற்றும் நவீனமாக்குதல் வேலைத்திட்டத்தின் கீழ் றம்புக்கனை, தெரணியகல மற்றும் பலாங்கொட கால் நடை வைத்தியப் பிரிவுகளில் செயற்படுத்துவதற்கு கால் நடை வளங்கள், பண்ணை அபிவிருத்தி மற்றும் பாற்பண்ணை மற்றும் முட்டை தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தம் ரூபா 1,323,500 ஆன 22 செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளால் நிராகரிக்கப்பட்டமையால் செயற்படுத்தப்படாது இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக குறிப்பிட்ட பொருட்களின் வளங்கள் ஒரே தடவையில் உயர்வடைந்தமையால் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கங்களில் உரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு போதியளவில் இல்லாமை மற்றும் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ஒதுக்கங்களை விடக் குறைவாக சம்பள அளவுகளை விவசாயிகளுக்கு வழங்கியமையால் உரிய செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கு முடியாதிருந்தமையால் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | செயற்திட்டம் இரத்துச் செய்யப்படாது செயற்படுத்தவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |